**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**

**மேட்டுர்,**

**தேதி: 11.03.2026**

**OS. No. 186/2024**

**வழக்கு சாட்சி PW.1–சாமிதுரை, த/பெ.காளியப்ப கவுண்டர்**

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 1, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**1, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

4) கோல்நாயக்கன் பட்டி கிராமம் ரெட்டியூரில் 150 வருடங்களுக்கு முன்பு ரெட்டியார் சமூகத்தினர் தான் அதிகப்படியாக இருந்தார்கள் என்று நான் சொல்லியுள்ளதற்கு ஆதரவாக ஆவணங்கள் எதையேனும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு தற்போது 67 வயது ஆகிறது. நான் பிறந்ததிலிருந்து வன்னியர் சமூகம் தான் அதிகமாக அந்த இடத்தில் உள்ளனர் என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் சாட்சியம் தான் நான் மேட்டுர் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் CC. No.691/2024 என்ற வழக்கில் நான் அளித்த சாட்சியம் என்றால் சரிதான். மேற்படி சாட்சியத்தில் அந்த கோவில் மேற்கூரை அமைப்பதற்காக வசதி உள்ளவர்களிடம் தர்மகர்தா மற்றும் ஊர் கவுண்டர் ஆகியோர்தான் வசூல் செய்தனர் என்று நான் சாட்சியம் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஊர் கவுண்டர் என்று என்னை தான் குறிப்பிட்டுள்ளேன். **அந்த CC. No.691/2024 என்ற வழக்கில் நான் அளித்த சாட்சியத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

5) கோவில் குடமுழுக்கை நிறுத்தவேண்டும் என்று மாண்புமிகு மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தில் நானும், வா.சா.1 ஆன ராஜகோபால் என்பவரும் சேர்ந்து ரிட் மனு தாக்கல் செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் நான் அவ்வாறு எதுவும் சொல்லவில்லை. மேற்படி மனுவின் கோவில் குடமுழுக்கு நடத்த உத்தரவு பிறப்பித்தார்கள் என்பது குறித்து எனக்கு தெரியாது என்று சொல்லியுள்ளேன் என்றால் அவ்வாறு எதுவும் சொல்லவில்லை. அதே சாட்சியத்தில் எதிரிகள் கோவில் குடமுழுக்கை சிறப்பாக நடத்தி முடித்தார்களா என்று கேட்டதற்கு அது குறித்து எனக்கு தெரியாது என்று சொல்லியுள்ளேன் என்றால் அவ்வாறு எதுவும் நான் சொல்லவில்லை. அந்த கோவிலுக்கு எத்தனை குடும்பங்கள் உள்ளது பற்றியோ, ஊர் மக்கள் கூடி குடமுழுக்கை சிறப்பாக நடத்தினார்கள் என்று கேட்டதற்கு அதை பற்றியும் எனக்கு

தெரியாது என்று தான் சொல்லியுள்ளேன் என்றால் நான் அவ்வாறு எதுவும் சொல்லவில்லை. குடமுழுக்கை நாங்கள் தான் சிறப்பாக நடத்தினோம். என்னிடம் காட்டப்படும் புகைப்படம் தான் இந்த வழக்கு கோவில் என்றும், அதில் உபயம் ஊர்கவுண்டர் நாகராஜ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் தற்போது காட்டப்படும் புகைப்படம் தான் இந்த வழக்கு கோவிலுக்குரிய கல்வெட்டு என்றும், அதில் ராஜகோபால் தர்மகர்தா என்றும், பா.ஆண்டியப்பன் 2 வது திருநீரு என்றும், பா.நாகராஜன் ஊர் கவுண்டர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு தான் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் 1932 ல் இருந்தே என் முன்னோர்களும் அவர்களுக்கு பின் நானும் கோவிலை ஊர் கவுண்டராக பராமரித்து வருகிறோம். **அந்த புகைப்படங்களின் அசல் (எண்ணிக்கை 2) பி.வா.சா.ஆ–2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

6) வழக்கு கோவிலுக்கு என் பெயர் ஊர்கவுண்டராக குறிப்பிட்டு அதற்கு ஆதரவாக ஏதேனும் ஆவணங்களோ, ரசீதுகளோ, பண்டிகை கால நோட்டீஸ்களோ, பெயர் பலகைகளோ என் தரப்பில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, என் பெரியப்பா பழனிசாமி அவர்கள் எனக்கு எழுதி கொடுத்த ஆவணத்தையும், நீதிமன்ற உத்தரவையும் தாக்கல் செய்துள்ளேன். என் பெரியப்பா மகன் தான் மேற்படி நாகராஜ் என்றால் சரிதான். என் பெரியப்பா பழனிசாமி அவர்கள் தன்னுடைய மகனான நாகராஜிக்கு தான் ஊர்கவுண்டர் பதவி கொடுத்தார் என்றால் சரியல்ல. என் பெரியப்பா என்னை ஊர் கவுண்டர் 2 வது திருநீரு என்று குறிப்பிட்டு ஆவணம் எழுதி கொடுத்துள்ளார்.

7) கல்வெட்டை உடைத்து தொடர்பாக தான் ராஜகோபால் கொடுத்த புகாரின் பேரில் நான் நேரில் பார்த்ததாக மேட்டுர் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் நான் சாட்சியம் அளித்தேன். 2008 ல் எங்கள் ஊர் மக்கள் அனைவரும் கூடி பத்திரம் ஒன்று ஏற்படுத்தினோம் என்றால் இல்லை. நான் உண்மையாகவே வழக்கு கோவிலுக்கு ஊர் கவுண்டராக இருந்திருந்தால் வருடா வருடம் எவ்வளவு தொகை வசூல் செய்யப்படுகிறது, அதில் கோவிலுக்காக எவ்வளவு செலவு செய்யப்படுகிறது என்பது குறித்து ஆவணங்கள் தாக்கல் செய்திருப்பேன் என்றால் தர்மகர்தா ராஜகோபாலிடம் உள்ளது. நான் தற்போது வரை எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால்

சரிதான், தர்மகர்தா தான் வசூல் செய்வதால் என்னிடம் ஆவணங்கள் எதுவும் இல்லை. அந்த கணக்கு வழக்குகள் குறித்த விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் பிரதிவாதிகள் நான் கோவிலுக்கு சென்றால் என்னை அடிக்க வருவதால் கடந்த 2 வருடங்களாக அவர்கள் வசூல் செய்த விவரங்கள் எனக்கு தெரியவில்லை.

8) வெளி நபர்களிடம் கோவில் சார்பாக எவ்வளவு தொகை வசூல் செய்யப்பட்டது என்றும், அதில் கோவில் கட்டுவதற்கு எவ்வளவு செலவானது என்றும் எனக்கு தெரியுமா என்றால் செலவுகள் போக மீதம் ரூ.51,000/–உள்ளது என்பது தெரியும், தர்மகர்தாவிடம் கணக்கு விவரங்கள் உள்ளதால் எனக்கு தெரியவில்லை. தர்மகர்தா ராஜகோபால் மீது 50 கிலோ கம்பி எடுத்து கொண்டு 500 கிலோவிற்கு ரசீது தயார் செய்யப்பட்டது தொடர்பாக ஊர் மக்கள் அனைவரும் அவர் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார்கள் என்றால் இல்லை. இந்த சம்பவத்திற்கு பிறகு ராஜகோபாலிடம் தர்மகர்தா பொறுப்பை மட்டும் விட்டுவிட்டு வசூல் செய்வது மற்றும் செலவு செய்வது தொடர்பாக ஊர் மக்கள் கமிட்டி ஏற்படுத்திக்கொண்டு அதன் பேரில் தான் கோவில் விழாக்கள் மற்றும் கும்பாபிஷேகம் நடந்து வருகிறது என்றால் சரியல்ல, அதிலிருந்து நானும், அவருடன் சேர்ந்து கோவிலுக்கு செல்வதில்லை என்றால் சரியல்ல, பிரதிவாதிகள் தான் பிரச்சனை செய்கிறார்கள்.

9) ராஜகோபால் சொல்லியதன் பேரில் தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும், நான் ஊர் கவுண்டர் இல்லை என்றால் சரியல்ல. வழக்கில் எனக்கு எவ்வித பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.